மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கீழப்பாளையூரிலே, இன்றைக்கு இருக்கின்ற 33/11 கே.வி. திறன்கொண்ட மின் நிலையத்திலே, 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அங்கே இல்லை. மாறாக 5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிதான் அங்கு இருக்கின்றது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே வளர்ந்து வரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டும், 5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியை மாற்றி, 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியாக மாற்றுவதற்கு அல்லது தேவையின் அடிப்படையிலே அங்கே செய்கின்ற ஆய்வின் அடிப்படையிலே, மின் தேவை எவ்வளவு என்பதைக் கருத்தில்கொண்டு, தேவையான அளவுக்கு திறன்கொண்ட மின்மாற்றியை கூடுதலாக அமைத்து அந்தப் பகுதியினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

269—

பேருந்து நிலையம்

***516—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, முக்கூடல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில், புதிய பேருந்து நிலையம் திருநெல்வேலி–கடையம் மாநில நெடுஞ்சாலையில், பேரூராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலத்தில், 3 ஏக்கர் பரப்பளவில், உள்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின்கீழ், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் நித்தம் நித்தம் புதுத் திட்டம், தமிழக மக்களுக்கெல்லாம் கொண்டாட்டம், இங்கே எதிர்க்கட்சிகள் எல்லாம் திக்குமுக்கு திண்டாட்டம் என்று நாள்தோறும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களை அள்ளித் தரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, முக்கூடல் பேரூராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஆலங்குளம் தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

270—

நிலங்கள் ஒப்படைப்பு

***7368—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—